# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/27 - 2023 ජූලි මස 19 වැනි බදාදා - 2023.07.19

*2341/27 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 33/1973* (III)

***1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டம்***

*1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 29 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 82அ என்பதன்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*கலாநிதி விஜேதாச ராஜபக்ச,*
*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்*
*அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, யூலை 17.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் பிரிவிடல் (நில அளவைக்கு செலுத்தப்படற்பாலதான வீதங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள வீதங்கள் 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் நியதிகளின்படி பிரிவிடல் வழக்கிலுள்ள பூர்வாங்க நில அளவைக்கான ஆகுசெலவுகளை மதிப்பீடு செய்வதில் ஏற்புடையற்பாலதான வீதங்களாகவிருத்தல் வேண்டும்.


1A - PG 6392 — 356 (2023/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள வீதங்கள் 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தின் நியதிகளின்படி இறுதிப் பிரிவிடலுக்கான நில அளவையின் ஆகுசெலவுகளை தீர்மானிப்பதில் ஏற்புடையற்பாலதான வீதங்களாகவிருத்தல் வேண்டும்.

4. 2014, யூலை 18 ஆந் திகதிய, 1871/42 ஆம் இலக்க , அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிரிவிடல் (நில அளவைக்காக செலுத்தப்படற்பாலதான வீதங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

(ஒழுங்குவிதி 2)

## அட்டவணை I

பூர்வாங்க நில அளவைக்கு ஏற்புடையற்பாலதான வீதங்கள்

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | பூர்வாங்க நில அளவை தொடர்பாக நிறைவேற்றப்படும் வேலை பற்றிய விபரங்கள் | ஏற்புடையற்பாலதான கட்டணங்கள் |
| 1. | திறத்தவர்களுக்கு பதிவுத் தபாலில் அறிவித்தல்களை அனுப்புதல் | அறிவித்தலொன்றுக்கு ரூபா 40 மற்றும் கடிதத்தைப் பதிவு செய்வதற்கு அறவிடப்படும் வீதம் |
| 2. | வாய்மூல பிரகடனத்தைச் செய்யும் ஆள் ஒருவருக்கு செலுத்தப்படற் பாலதான வேதனம் மற்றும் பிரயாணச் செலவினங்கள் | ரூபா 3,000/- மற்றும் இடத்திற்குப் பயணிப்பதற்கும் அங்கிருந்து மீண்டும் வருவதற்கான பஸ் கட்டணம் |
| 3. | எந்தக் காணி தொடர்பில் நில அளவை மேற்கொள்ளப்பட்டதோ, அத்தகைய காணி - | |
| | (அ (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட மாநகர சபையொன்றின் எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ; | 250 சதுர மீற்றர் வரை ரூபா 20,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றர்களுக்கும் ரூபா 2,000/- |
| | (ஆ) (i) தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட் டுள்ள நகர அபிவிருத்தி இடப் பிரதேசத்தின் எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ;<br>(ii) தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள முதலீட்டுச் சபையினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் அதிகார இடப் பிரதேசத்தில் அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வலயத்தினுள் அமைந்திருக்குமிடத்து ;<br>(iii) (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர சபை எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து. | 250 சதுர மீற்றர் வரை ரூபா 15,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 500 சதுர மீற்றர்களுக்கும் ரூபா 2,000/- |
| | (இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ;<br><br>(மேலே குறிப்பிடப்பட்டுள்ள நில அளவையானது நில வரைபடத்தை மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல், இணைப் பிரதிகளை வழங்குதல், நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டங்களைக் காட்டுதல் மற்றும் வரைபடத்தில் அபிவிருத்தியைக் காட்டுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.) | 250 சதுர மீற்றர் வரை ரூபா 12,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 250 சதுர மீற்றர்களுக்கு ரூபா 1,500/- |

| | | |
|---|---|---|
| 4. | உதவியாளர்களுக்கு வேதனம் –<br>(அ பயிற்றப்பட்ட உதவியாளர் ஒருவருக்கு<br>(ஆ) பயிற்றப்படாத ஒவ்வொரு உதவியாளருக்கும் :<br><br>ஆயின், எவ்வாறாயினும் உதவியாளர்களின் எண்ணிக்கை பயிற்றப்பட்ட உதவியாளர்கள் உள்ளடங்கலாக ஐந்து உதவியாளர்களுக்கு மேற்பட்ட வரிகளாகவிருத்தலாகாது. | <br>ரூபா 3,500/-<br>ரூபா 3,000/- |
| 5. | நில அளவையாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான சூழ்நிலைகள் காரணமாக, ஒரு நாளில் நில அளவை பூரணப்படுத்த முடியாதவிடத்து, இயைபான திகதிக்கு பின்வரும் வீதங்கள் அறவிடற்பாலதாதல் வேண்டும் :-<br>(அ) நில அளவையாளருக்கான தொழிலாண்மைசார் கட்டணங் கள் ;<br>(ஆ) பயிற்றப்பட்ட உதவியாளர் ஒருவருக்கு ;<br>(இ) பயிற்றப்படாத ஒவ்வொரு உதவியாளருக்கும் :<br><br>ஆயின், எவ்வாறாயினும் உதவியாளர்களின் எண்ணிக்கை பயிற்றப்பட்ட உதவியாளர்கள் உள்ளடங்கலாக ஐந்து உதவியாளர்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். | <br>ரூபா 7,500/-<br>ரூபா 3,500/-<br>ரூபா 3,000/- |
| 6. | நில அளவையாளருக்கான தொழிலாண்மைசார் கட்டணங்கள் | சாட்சியமளித்தல் உட்பட எல்லாக் கடமைகளுக்கும் சமுகமளித்தமைக்காக நாளொன்றுக்கு ரூபா 10,000/- |
| 7. | நில அளவைக்கான ஆகக்குறைந்த வைப்பு | 2,000 சதுர மீற்றர் வரை ரூபா 20,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றர்களுக்கும் ரூபா 3,500/- |
| 8. | 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட வெள்ளவத்தை, கிருலப்பனை மற்றும் தெஹிவளை ஆகிய பிரதேசங்களுக்கு சுவட்டு வரைபடங்களைத் தயாரிப்பதற்கு | முறையே விடயம் 1 முதல் 5 வரை குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 60% ஆன மேலதிகக் கொடுப்பனவு |
| 9. | தடை ஏற்படுத்துதல் மற்றும் இடையூறு ஏற்படுத்தல் காரணமாக நில அளவையாளர் நில அளவையைப் பூர்த்திசெய்ய இயலாதவ ராகவுள்ளவிடத்து, பின்வரும் வீதங்கள் அறவிடற்பாலதாதல் வேண்டும் :-<br>(அ) நில அளவையாளரின் தொழில்சார் கட்டணம்<br>(ஆ) பயிற்றப்பட்ட உதவியாளர் ஒருவருக்கு<br>(இ) பயிற்றப்படாத ஒவ்வொரு உதவியாளருக்கும்<br><br>ஆயின், எவ்வாறாயினும் உதவியாளர்கள் எண்ணிக்கை பயிற்றப்பட்ட உதவியாளர்கள் உட்பட ஐந்து உதவியாளர்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். | <br>ரூபா 10,000/-<br>ரூபா 3,500/-<br>ரூபா 3,000/- |
| 10. | நில அளவை செய்யப்படவேண்டிய காணிக்கான பயணமானது நீதிமன்றத்திலிருந்து காணிக்கான தூரமானது கணக்கிடப்படுதல் வேண்டும். | வீதங்கள் தாபனக் கோவைக்கிணங்க பகிரங்க அலுவலர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். |
| 11. | வேறு ஏதேனும் வரைபடத்தை மிகைப்படுத்துவதற்கு | முதல் 10 துண்டுகளுக்கும் ரூபா 5,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக துண்டுக்கும் ரூபா 250/- |

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

இறுதி நில அளவைக்கு ஏற்புடையற்பாலதான வீதங்கள்

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| இறுதி நில அளவை தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ள வேலையின் விபரங்கள் | | ஏற்புடையற்பாலதான வீதங்கள் |
| 1. | திறத்தவர்களுக்கு பதிவுத் தபாலில் அறிவித்தல்களை அனுப்புதல் | அறிவித்தலொன்றுக்கு ரூபா 40 மற்றும் கடிதத்தைப் பதிவு செய்வதற்கு அறவிடற்படற்பாலதான வீதம் |
| 2. | வாய்மூல பிரகடனத்தைச் செய்யும் ஆள் ஒருவருக்கு செலுத்தப்படற் பாலதான வேதனம் மற்றும் பிரயாணச் செலவினங்கள் | இடத்திற்குப் பயணிப்பதற்கான மற்றும் அங்கிருந்து மீண்டும் வருவதற்கான பஸ் கட்டணம் ரூபா 3,000/- |
| 3. | எந்தக் காணி தொடர்பில் நில அளவை மேற்கொள்ளப்பட்டதோ, அத்தகைய காணி - | |
| | (அ (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட மாநகர சபையொன்றின் எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ; | 250 சதுர மீற்றர் வரை ரூபா 20,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றர்களுக்கும் ரூபா 2,000/- |
| | (ஆ) (i) தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட் டுள்ள நகர அபிவிருத்தி இடப் பிரதேசத்தின் எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ; | 250 சதுர மீற்றர் வரை ரூபா 15,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 500 சதுர மீற்றர்களுக்கும் ரூபா 2,000/- |
| | (ii) தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள முதலீட்டுச் சபையினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் அதிகார இடப் பிரதேசத்தில் அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வலயத்தினுள் அமைந்திருக்குமிடத்து ; | |
| | (iii) (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகர சபை எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ; | |
| | (இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிரதேச சபை எல்லைக்குள் அமைந்திருக்குமிடத்து ;<br><br>(மேலே குறிப்பிடப்பட்டுள்ள நில அளவையானது நில வரைபடத்தை மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல், இணைப் பிரதிகளை வழங்குதல், நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டங்களைக் காட்டுதல் மற்றும் வரைபடத்தில் அபிவிருத்தியைக் காட்டுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.) | 250 சதுர மீற்றர் வரை ரூபா 12,000/- மற்றும் ஒவ்வொரு மேலதிக 250 சதுர மீற்றர்களுக்கு ரூபா 1,500/- |
| 4. | உதவியாளர்களுக்கு வேதனம் - | |
| | (அ பயிற்றப்பட்ட உதவியாளர் ஒருவருக்கு | ரூபா 3,500/- |
| | (ஆ) பயிற்றப்படாத ஒவ்வொரு உதவியாளருக்கும் :<br><br>ஆயின், எவ்வாறாயினும் உதவியாளர்களின் எண்ணிக்கை பயிற்றப்பட்ட உதவியாளர்கள் உள்ளடங்கலாக ஏழு உதவியாளர்களுக்கு மேற்படுதலாகாது. | ரூபா 3,000/- |

| | | |
|---|---|---|
| 5. | நில அளவையாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான சூழ்நிலைகள் காரணமாக, ஒரு நாளில் நில அளவை பூரணப்படுத்த முடியாதவிடத்து, இயைபான திகதிக்கு பின்வரும் வீதங்கள் அறவிடற்பாலதாதல் வேண்டும் :- | |
| | (அ) நில அளவையாளருக்கான தொழிலாண்மைசார் கட்டணங் கள் ; | ரூபா 7,500/- |
| | (ஆ) பயிற்றப்பட்ட உதவியாளர் ஒருவருக்கு ; | ரூபா 3,500/- |
| | (இ) பயிற்றப்படாத ஒவ்வொரு உதவியாளருக்கும் : | ரூபா 3,000/- |
| | ஆயின், எவ்வாறாயினும் உதவியாளர்களின் எண்ணிக்கை பயிற்றப்பட்ட உதவியாளர்கள் உள்ளடங்கலாக ஐந்து உதவியாளர்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். | |
| 6. | நில அளவையாளருக்கான தொழிலாண்மைசார் கட்டணங்கள் | சாட்சியமளித்தல் உட்பட எல்லாக் கடமைகளுக்கும் சமுகமளித்தமைக்காக நாளொன்றுக்கு ரூபா 10,000/- |
| 7. | பின்வருமாறு நில அளவை செய்யப்பட்டிருக்குமிடத்து - | |
| | (அ) பூர்வாங்க நில அளவையை நிறைவேற்றிய அதே அளவையாளருக்கு பூர்வாங்க நில அளவையின் ஓராண்டினுள் ஆணை வழங்கப்பட்டிருப்பின், | பூர்வாங்க நில அளவையை நிறைவேற்றுவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணத்தின் அரைவாசி (1/2) |
| | (ஆ) பூர்வாங்க நில அளவை ஒரு வருடத்தின் பின்னர் அதே நில அளவையாளருக்கு ஆணை வழங்கப்பட்டிருப்பின் | பூர்வாங்க நில அளவையை நிறைவேற்றுவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணத்தின் அரைவாசி (3/4) |
| | (இ) கால எல்லையைப் பொருட்படுத்தாது வேறொரு நில அளவையாளருக்கு ஆணை வழங்கப்பட்டிருப்பின் | பூர்வாங்க நில அளவையை நிறைவேற்றுவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணம் |
| 8. | (அ காணித் துண்டாடல் தயாரித்தல் | முதல் 10 காணித் துண்டுகளுக்கு ரூபா 6,000/- மற்றும் மேலதிகமான ஒவ்வொரு காணித் துண்டுக்கும் ரூபா 500/- |
| | (ஆ) காணித்துண்டாடலைச் செய்தல் : | |
| | (i) 500 சதுர மீற்றர் வரையான ஒரு காணித் துண்டுக்கு | ரூபா 2,000/- |
| | (ii) 1000 சதுர மீற்றர் வரையான ஒரு காணித் துண்டுக்கு | ரூபா 2,500/- |
| | (iii) 2000 சதுர மீற்றர் வரையான ஒரு காணித் துண்டுக்கு | ரூபா 3,000/- |
| | (iv) 4000 சதுர மீற்றர் வரையான ஒரு காணித் துண்டுக்கு | ரூபா 4,000/- |
| | (v) 4000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட ஒரு காணித் துண்டுக்கு | ரூபா 5,000/- |
| 9. | நட்டஈடு செலுத்தும் அல்லது சமப்படுத்தும் நோக்கத்துக்காக நிலத்தின், பெருந்தோட்டங்களின் மற்றும் கட்டிடங்களின் மற்றும் ஏனைய நிர்மாணிப்புக்களின் மற்றும் மேம்படுத்தல்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கான கட்டணங்கள் : | |
| | (i) 1 ஆம் தளத்திக்கு | ரூபா 50,000/- 1% - ரூபா 500/- ; |
| | (ii) 2 ஆம் தளத்திக்கு | ரூபா 50,000/- 0.75% - ரூபா 375/- ; |
| | (iii) 3 ஆம் தளத்திக்கு | ரூபா 50,000/- 0.5% - ரூபா 250/- ; |
| | (iv) 5 ஆம் தளத்திக்கு | ரூபா 50,000/- 0.25% - ரூபா 125/- ;<br>ரூபா 200,000/- - ரூபா 1,250/- ; |
| | (v) ரூபா 200,000/- இற்கு மேற்படின் | மதிப்பீட்டிற்கு 0.125% |
| 10. | மதிப்பீட்டு அட்டவணை மற்றும் பகிர்ந்தளித்தல் மற்றிய சுருக்கத்தல் தயாரித்தல் | முதல் நான்கு துண்டுகளுக்கு ரூபா 250/- மற்றும் மேலதிகமான ஒவ்வொரு காணித் துண்டுக்கும் ரூபா 300/- |
| 11. | நில அளவையிடப்படுவதற்கான காணிக்கான பயணமானது நீதிமன்றத்திலிருந்து னாணிக்கான தூரம் கணக்கிடப்படுதல் | தாபனவிதிக் கோவைக்கிணங்க பகிரங்க அலுவலர்களுக்கு செலுத்தப்படும் வீதங்கள் |

EOG 07 - 0179

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.